*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *X*, பதிப்பு *23*, ஜனவரி – ஜீன் 2026
*Formally UGC Approved Journal (64089), © Author*

# கவிஞர் பழநிபாரதி கவிதைகளில் சமகாலச் சிக்கல்களும் தீர்வுகளும்

**செ. தங்கராஜ்**
தமிழ்த்துறைத் தலைவர்
கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
திருச்செங்கோடு

**ஆய்வுச்சுருக்கம்**

*புதுக்கவிதை உலகில் தமக்கெனத் தனித்துவமான முத்திரையைப் பதித்தவர் கவிஞர் பழநிபாரதி. காதல் கவிதைகள் வழி பரவலாக அறியப்பட்டாலும், அவருடைய படைப்புகள் சமகாலச் சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களையும், அதனால் ஏற்படும் மனித மன நெருக்கடிகளையும் மிக ஆழமாகப் பதிவு செய்துள்ளன. இக்கட்டுரை, பழநிபாரதியின் கவிதைகளில் வெளிப்படும் சமகாலச் சிக்கல்களையும், அவற்றுக்கு அவர் முன்வைக்கும் தீர்வுகளையும் பகுப்பாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

## முன்னுரை

நவீனத் தமிழ் கவிதை உலகில் தனக்கென ஒரு தனித்துவமான முத்திரையைப் பதித்தவர் கவிஞர் பழனிபாரதி. காதல் நிகழ்வுகளையும், கற்பனைக் கதைகளையும் எழுதுவதோடு நில்லாமல், தன் பேனா முனையைக் காலத்தின் சக்கரத்தில் சாட்சியாக மாற்றிக் காட்டுபவர். 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில், 21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்ச்

சமூகம் சந்தித்த, சந்தித்துக் கொண்டிருக்கிற பல்வேறு வாழ்வியல் மாற்றங்களான சாதி, சீர்திருத்தம், வரதட்சனைக்கொடுமை போன்ற சிக்கல்களையும் இவரது பாடல்களில் சமகாலச் சிக்கல்களைத் களைந்து தீர்வு காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**சாதி**

எத்தனையோ கவிஞர்கள், அரசியல்வாதிகள், சமூக சீர்திருத்தவாதிகள் வந்தாலும் ஒன்றே ஒன்றை மட்டும் மாற்ற இயலவில்லை என மனம் வெதும்புகிறார் பழநிபாரதி. காதல் என்பது சாதி பார்த்து வருவதில்லை இரு உள்ளங்கள் இணைந்ததே காதல். அப்படிப்பட்ட காதல் சாதிகளுக்கு முன்னர் பலியிடும் கிடாய் போன்று நிற்கிறது என சாதிய ஆணவக் கொலைகள் பற்றி,

"**சாதிகளின் முன்னால்**
**இந்தக்**
**காதல்**
**ஒரு**
**பலிகடாவைப் போல்**
**பாவமாய் நிற்கிறது!**"[1]

என்கிறார் கவிஞர். காதல் திருமணங்களுக்கு இடையூராக இருக்கும் அனைத்தும் களைந்திட நாம் இன்றிலிருந்து போராடுவோம் என்பதை,

"**சாதிகளை எரிக்க**
**நாம் கொளுத்தும்**
**அந்தத் தீப்பந்த**
**வெளிச்சத்தில்**...
**காதல் வானம்**
**நடுப்பகலாய்**
**வெளுத்திருக்கும்**"[2]

என்கிறார். சாதி மதம் கடந்தது காதல் என்று நான் மார்தட்டிக் கொண்டிருக்கும் போது சாதி மாறிய காதலால் ஆணவக் கொலைகளும் நாட்டில் நடைபெறுகின்றது என மனம் நொந்து போகிறார் கவிஞர். சுவாதி

மற்றும் ராம்குமார் ஆகியோரின் இறப்பு குறித்தும் தனது சினத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**"கொலைக்கும் தற்கொலைக்குமிடையில்**
**அவன் உறங்கிவிட்டான்**
**உண்மைக்கும் பொய்மைக்குமிடையில்**
…………………………………
**அதன் இருள்**
**நீதிமன்றம் போகும் வழியெங்கும்**
**பரவிக்கிடந்ததைப் பார்த்திருக்கக்கூடும்**
**இருளுக்கும் வெளிச்சத்திற்குமிடையில்**
**அவனது நிழலும் உறங்கிவிட்டது"**[3]

உத்திரப்பிரதேசத்தில் 30.05.2024 அன்று இரு சிறுமிகள் உயர் சாதியினரால் வன்புணர்வு செய்யப்பட்டு மாமரத்தில் தொங்கவிட்டிருந்த நிகழ்வு நாட்டையே உலுக்கியது.

**"தள்ளி நின்று வேடிக்கை பாருங்கள்**
**இந்த மரத்தின் நிழல்**
**சாதியின் ரத்தம்**
**வன்புணர்வின் துக்கம்"**[4]

அவ்வாறு நிகழ்ந்ததை வன்மையாகக் கண்டிக்கும் அவர், அம்மாமரம் காளிதேவி போல் முடி கலைந்து, நகம் வளர்ந்து, முகம் சினந்து குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்கிறார்.

**வரதட்சணைக் கொடுமை**

இரு மனங்களின் இணைவு திருமணம். இரு வீட்டாரின் ஒப்புதலோடு முறைப்படி திருமணங்கள் நடைபெறுவது உண்டு. இதில், குறிப்பாக மணமகள் வீட்டார் மணமகன் வீட்டிற்கு தன் பெண்ணுடன் சேர்த்து பொன்னும், பொருளையும் தருகின்றனர். ஆனால், ஒரு சில இடங்களில் இது மணமகன் வீட்டினரால் மணமகள் வீட்டினர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது. திருமணம் முடிந்து புகுந்த வீட்டிற்குச் சென்ற

பெண்ணிடம் வரதட்சணை கேட்டு சித்தரவதை செய்கிறார்கள். இதனை எதிர்த்துக் கேட்ட அப்பெண்ணை தீயிட்டு கொளுத்திய நிகழ்வை,

**"சௌகரியங்களுக்கு மட்டுமே**
**பயன்படுத்திக் கொள்ள**
**பெண்களென்ன**
**சீட்டாத்தில் கிடைத்த**
**ஜோக்கர்களா?**
**இந்தக் கேள்விக்கணைகளுக்காக**
**அவள்**
**வாதாடும் போதுதானே**
**தீ...**
**அவள்மீது விளையாடியது..."[5]**

எனக்கூறும் பழநிபாரதி, இந்தத் தீயே இறுதியாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். மேலும், சமுதாய மக்களிடம் இருக்கும் இப்பழக்கவழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதை,

**"எரியும் அவளது**
**சடலத் தீ**
**குருட்டுச் சமுதாயத்திற்குக்**
**கொள்ளி வைக்கட்டும்"[6]**

எனக் கூறுகிறார். ஒரு சில பெண்களுக்கு வரதட்சணை கொடுக்க இயலாததால் திருமணமே நடைபெறாமல் போகிறது என்கிறார்.

**"இறகுகள் உதிர்த்தபடி**
**மேகங்களுக்கும் மேலே**
**சிறகடிக்கும்**
**அவளது கல்யாணப் புறாவை**
**வரதட்சணைக் கழுகுகள்**
**இன்னும் விரட்டுகின்றன"[7]**

இதனால் அவர்கள் காவியாடை அணிந்துள்ளதை,

**"கல்யாணத்திற்காக**

**கண்ணீர்த்தவம் இருந்தவளுக்கு**

**கடைசியில்**

**மோட்சம் கிடைத்தது**

**காவியாடையில்**"[8]

எனவும்,

"**வரதட்சணையால்**

**சபிக்கப்பட்ட**

**முதல் முதற்கண்ணி**

**மாதவிலக்கும் நின்று போனதை**

**யாரிடம் சொல்லியிருப்பாள்**"[9]

எனவும் சமூகத்தில் புரையோடியுள்ள வரதட்சணையை நினைத்து மனம் வெதும்புகிறார் கவிஞர்.

**சீர்திருத்தம்**

1980-இல் நாராயண்பூர் கிராமத்தில் அத்துமீறி நுழைந்த காவல்துறையினர் அங்கிருந்த பெண்களை பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கினர். அப்பாவிப் பொதுமக்களைத் துப்பாக்கியால் சுட்டுப் பொசுக்கினர்.

"**அப்பாவிகளுக்கு**

**மரணச் சுருக்குப் போட்ட**

**துப்பாக்கிகளின் துஷ்பிரயோகம்**"[10]

மேலும், இந்த வழக்கில் உரிய நீதி கிடைக்காததை எண்ணி வேதனைப்படுகிறார்.

"**நீதி தேவதையே!**

**நீ –**

**நித்திரையில்**

**இருப்பதாய்த்தான்**

**இதுவரையும் நினைத்திருந்தோம்...**

**நீ –**

**விலை**

**மகளானது**
**எப்போது...?"**[11]

எனக் கடுமையாக நீதிபதிகளையும் நீதித்துறையினையும் சாடுகிறார். ஒரே ஒரு வெள்ளைத்தாள் மூலமாக நாட்டில் நடைபெறும் அவலங்களை மாற்ற இயலும் என்கிறார் கவிஞர். காதலின் பேரில் பெண்களின் முகத்தில் வீசப்படும் திரவ வீச்சு, விவசாய நிலங்களில் புதைக்கப்பட்டிருக்கும் மீத்தேன் எரிவாயு குழாய், இலங்கை ராணுவத்தால் நமது மீனவர்கள் தாக்கப்படும் நிகழ்வு அரசியல்வாதிகளின் சொத்து விபரம் போன்றவற்றை காகிகத்தால் வெளிக்கொணர முடியும். ஆனால், அதையெல்லாம் இச்சமூகம் மாற்றிவிடும் என்பதை,

**"நம் அரசியல்வாதிகளின்**
**அசல் சொத்துக்கணக்குகளை**
**இதில் அச்சடிக்கலாம்**
**இறையாண்மைக்கு எதிராக**
**கைது செய்யப்பட்டால்**
**நான் என்ன செய்ய முடியும்"**[12]

எனக் கூறுகிறார்.

**தொகுப்புரை**

- சமூகம் என்பது தனிப்பட்ட மனிதன் இணைந்து வாழும் முறை என்றும், சமுதாயம் என்பது அவ்வாறு இனைந்து வாழும் மனிதர்களின் கடமைகளைக் கூறுவதாகவும் விளக்கப்பட்டுள்ளது.
- சாதி மதம் கடந்தது காதல் என்று நான் மார்தட்டிக் கொண்டிருக்கும் போது சாதி மாறிய காதலால் ஆணவக் கொலைகளும் நாட்டில் நடைபெறுகின்றது என மனம் நொந்து போகிறார் கவிஞர்.
- சுவாதி மற்றும் ராம்குமார் ஆகியோரின் இறப்பு குறித்தும் தனது சினத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
- காதலின் பேரில் பெண்களின் முகத்தில் வீசப்படும் திரவ வீச்சு, விவசாய நிலங்களில் புதைக்கப்பட்டிருக்கும் மீத்தேன் எரிவாயு குழாய், இலங்கை ராணுவத்தால் நமது மீனவர்கள் தாக்கப்படும் நிகழ்வு அரசியல்வாதிகளின்

சொத்து விபரம் போன்றவற்றை காகிகத்தால் வெளிக்கொணர முடியும். ஆனால், அதையெல்லாம் இச்சமூகம் மாற்றிவிடும் என்பதையும் சாடியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. பழநிபாரதி., நெருப்புப் பார்வைகள், ப.13
2. மேலது, ப.14
3. பழநிபாரதி., படிமங்கள் உறங்குவதில்லை, ப.51
4. பழநிபாரதி., சூரியனுக்குக் கீழ் ஒரு வெள்ளைக் காகிதம், ப.20
5. பழநிபாரதி., நெருப்புப் பார்வைகள், ப.18
6. மேலது, ப.18-19
7. மேலது, ப.52
8. மேலது, ப.53
9. பழநிபாரதி., காதலின் பின் கதவு, ப.31
10. பழநிபாரதி., நெருப்புப் பார்வைகள், ப.25
11. மேலது, ப.25
12. பழநிபாரதி., சூரியனுக்குக் கீழ் ஒரு வெள்ளைக் காகிதம், ப.64